# பரீட்சகரின் அறிக்கை

**AA1 பரீட்சை – 2019 யூலை**

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

*பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாப்பத்திரத்திற்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது பல பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் குறிப்பிட்ட குறைபாடுகள் இருந்ததைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. விடைகளை மதிப்பீடு செய்த பரீட்சகர்களின் அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன:*

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

**(கட்டாய வினா)**

இவ்வினா ஒட்டுமொத்த பாடத்திட்டத்தையும் பரந்தளவில் உள்ளடக்கி மொத்தமாக 40% புள்ளிகளுக்காகக் கட்டமைக்கப்பட்டிருந்தது. இது பாடத்திட்டத்தில் அமைக்கப்பட்ட கனத்திற்கேற்ப அடிப்படை விஞ்ஞானரீதியான பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. வினா இலக்கங்கள் 1.1 தொடக்கம் 1.10 வரை தரப்பட்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்யும்படி கேட்கப்பட்டிருந்தது. வினா இலக்கங்கள் 1.11 தொடக்கம் 1.15 வரை தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்ட அதே வேளை வினா இலக்கங்கள் 1.16 தொடக்கம் 1.20 வரை தரப்பட்ட விடைகளிலிருந்து பொருத்தமானதைக் கொண்டு இடைவெளிகளைப் பூரணப்படுத்துமாறு கேட்கப்பட்டிருந்தது.

பல பரீட்சார்த்திகள் இவ்வினாக்களுக்கு சரியான விடை அளித்திருந்ததுடன் உயர் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் அளித்த விடைகளில் குறைபாடுகளும் காணப்பட்டன.

பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளில் பொதுவாக அவதானிக்கப்பட்ட ஒரு சில பிழைகள் / பலவீனங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன:

**1.1** இவ்வினா ஏதாவது சமூகத்தின் வரையறையற்ற தேவைகளை நிறைவேற்றுவதற்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திக்கான பொருளாதார வளங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்து புள்ளிகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர். காணியைப் பயன்படுத்துவதற்கான கொடுப்பனவு வாடகை எனக் குறிப்பிடப்படுகிறது.

**1.2** அதிகளவான பரீட்சார்த்திகள் கேள்வியைத் தீர்மானிப்பது எதுவெனக் கேட்கப்பட்ட இவ்வினாவுக்குச் சரியான விடை எழுதியிருந்தனர்.

**1.3** இவ்வினா சந்தைக் கட்டமைப்பின் விளக்கம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. சிலருரிமை நிறுவனமொன்றின் பண்பியல்பாக இல்லாத ''பிரவேசத்திற்கான தடைகள் எதுவுமில்லை'' என்பது சரியான விடையாகும்.

**1.4** அதிகளவான பரீட்சார்த்திகள் கிரய எண்ணக்கரு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்த இந்த வினாவுக்கு தவறான விடைகளை எழுதியதன் காரணமாக புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. கிரய எண்ணக்கரு பற்றிய அறிவு போதாததன் காரணமாக பிழையான விடைகள் எழுதப்பட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

**1.5** அதிகளவான பரீட்சார்த்திகள் நிறுவனமொன்றின் குறுங்கால ஓட்டம் தொடர்பான விளக்கத்தைக் கொண்டிராத காரணத்தால் இவ்வினாவுக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவில்லை.

**1.6** மத்திய வங்கி அறிக்கைகள் போன்ற பாடத்துடன் தொடர்புடைய அறிக்கைகளில் கவனம் செலுத்தாமை காரணமாக நடைமுறை அறிவினைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்ட இந்த வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகளால் விடையளிக்க இயலவில்லை.

**1.7** இது மத்திய வங்கியின் நாணயக்கொள்கை பற்றிய அறிவைப் பரீட்சிக்க அமைக்கப்பட்ட வினாவாகும். நாணயக் கொள்கையின் பண்புசார் கட்டுப்பாடு பற்றிய அறிவின்மை காரணமாக அதிகளவான பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

**1.8** அதிகளவான பரீட்சார்த்திகள் மத்திய வங்கியின் தொழிற்பாடாக அமையாதது எது என்பதற்கு சரியான விடையாக அமைந்த விடை இல. (2) இல் இருந்த கடன்கள் மற்றும் மேலதிகப் பற்று வசதிகளை வழங்குதல் என்பதைத் தெரிவு செய்ததன் மூலம் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**1.9** இவ்வினா வருமானத்தின் தேசிய பாய்வின் ஒரு வெளிப்பாய்வுக்கான உதாரணம் ஒன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார முறைமையின் வேறுபட்ட பிரிவுகளுக்கிடையிலான தொடர்புடைமை பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. உதாரணம் ஒன்றிற்கான சரியான விடை ''இறக்குமதி'' என்பதை வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே வழங்கியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**1.10** பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கான சரியான விடையான ''சந்தைச் சமநிலை'' என்பதை எழுத முடியவில்லை. இது பேரினப் பொருளாதார மாறிகள் தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்ட வினாவாக இருந்தது.

**1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான சரியான விடைகள், தரப்பட்ட கூற்றுக்கள் சரியா, தவறா எனக் குறிப்பிடுவதன் மூலம் வழங்கப்பட வேண்டும். இந்த 5 வினாக்களில் வினா இல. **1.11** மற்றும் **1.13** இற்கு அதிகளவில் பிழையான விடைகளே வழங்கப்பட்டன. பணத்தின் தொழிற்பாடுகள் பற்றிய அறிவு இவற்றின் மூலம் பரீட்சிக்கப்பட்டிருந்தது. கேள்வியின் வருமான நெகிழ்ச்சி பற்றிய எண்ணக்கரு தொடர்பில் போதிய அறிவு காணப்படாததன் காரணமாக வினா இல. **1.13** இற்கு சரியான விடைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

வினா இலக்கம் **1.16** தொடக்கம் **1.20** வரை தரப்பட்ட 2 விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்திருத்தல் வேண்டும். பல பரீட்சார்த்திகள் வினா இல. **1.17, 1.18, 1.19, 1.20** இற்கு தவறான விடையையே அளித்திருந்தனர.

பாட விடயங்களுக்குரிய பின்வரும் விடயங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது வெளித்தெரிந்திருந்தது:

- உற்பத்திச் சக்கரம்
- மத்திய வங்கியினால் விற்பனை செய்யப்படும் திறைசேரி உண்டியல்கள் / முறிகள் பண நிரம்பலை எவ்வாறு பாதிக்கின்றது
- ஒரு நாட்டின் கட்டமைப்பு மாற்றத்தைப் பாதிக்கின்ற அரசாங்க மூலதனச் செலவினமும் நெருக்கடியான காரணிகளும்

## பகுதி B

ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 4 கட்டாய வினாக்கள்.

### வினா இல. 02

**(கட்டாய வினா)**

**(a)** இவ்வினா பொருளியலின் அடிப்படை எண்ணக்கருவிலுள்ள பிரதான பொருளாதார வளங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கி புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆனால், **பகுதி (ii)** இல் தேவைப்படுத்தப்பட்ட விடயங்களை விபரிக்காத பல பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் வியாபாரம் அல்லது கட்டடங்களாக காணியை இனங்கண்டிருந்ததுடன் அவர்களில் பலர் அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து பெறுகின்ற நன்மைகள் பற்றி சரியாக விடையளித்திருக்க வில்லை. மனித உழைப்பு வியாபாரத்தைக் கொண்டு நடத்தத் தேவையாக உள்ளதை விடைகள் வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன் அத்தகைய சேவைகளுக்காகச் செலுத்தப்பட்ட நன்மைகள் பற்றிய எவ்வித யோசனைகளையும் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவை விளங்கிக்கொள்வது கஷ்டமானதாகக் காணப்பட்டது. அவர்கள் சந்தைப் பொருளாதார முறைமை மற்றும் திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமை ஆகியவற்றின் அம்சங்கள் பற்றி எழுதியிருந்தனர். அத்தகைய முறைமைகளால் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பது பற்றி மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாக எழுதியிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் முதலாளித்துவ மற்றும் திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களில் எவ்வாறு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்பது பற்றி எழுதியிருக்கவில்லை. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி மாத்திரம் எழுதியிருந்தனர்.

### வினா இல. 03

**(கட்டாய வினா)**

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர் ஆயினும் அதன் வடிவம் பற்றிய அறிவின்மை பிரச்சினைகளைத் தோற்றுவித்திருந்தது.

**(b)** **(i)** உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் புதுப்பிக்காததே கேள்வி வளையியின் சாய்வு கீழ்நோக்கிச் செல்வதற்கான காரணம் என சில பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இதன் விளைவாக கேள்வி குறைவடைகிறது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வருமானத் தாக்கம் மற்றும் பிரதியீட்டுத் தாக்கம் என்பவை பற்றி விடையளித்திருக்கவில்லை.

**(ii)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் நுகர்வோர் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை ஆகிய எண்ணக்கருக்களை விபரிப்பதற்கு வரைபொன்றை வரைந்திருக்கவில்லை.

### வினா இல. 04

**(கட்டாய வினா)**

**(a)** **(i)** பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியிடும் இரண்டு மூலங்களைக் குறிப்பிடுமாறு இங்கு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் திறைசேரி உண்டியல்கள், முறிகள் மற்றும் வரிகள் பற்றிய விளக்கமின்றி விடையளித்திருந்தனர்.

**(ii)** ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் அரச தொழில்முயற்சி நிறுவனங்களின் இரண்டு நன்மைகளை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகளால் எழுதப்பட்ட விடைகளில் இருப்பின் தொடர்ச்சி மற்றும் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட உதவி போன்றவை உள்ளடங்கியிருந்தன.

**(b)** பணத்திற்கான கேள்விக்குரிய 3 நோக்கங்களைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக்கொண்டதன் காரணமாக இவ்வினாவுக்கு உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நோக்கங்களைப் பெயரிட்டிருந்தனர் ஆயினும் அவற்றை விபரிக்கத் தவறியிருந்ததன் காரணமாக அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**வினா இல. 05**

**(கட்டாய வினா)**

**(a)** **(i)** முழு நயம் தொடர்பில் சரியான விடைகளை வழங்கி முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்ட பல பரீட்சார்த்திகள் இருந்தனர். வரையறுக்கப்பட்ட அளவிலான பரீட்சார்த்திகள் வெங்காயத்தையும் பூண்டையும் குழப்பி கவனத்திற்கொண்டிருந்ததன் விளைவாக அவர்களால் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

**(ii)** ஒப்பீட்டு நயம் தொடர்பில் சரியான விடையை அளிப்பதற்கு தரப்பட்ட அட்டவணையைச் சரியாக பரீட்சார்த்திகள் விளங்கிக்கொண்டிராமை அவதானிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பான அறிவு மிகவும் குறைவாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. கணிப்பீடுகள் சரியாகச் செய்யப்படாத காரணத்தால் 4 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த இந்தப் பகுதிக்கு புள்ளிகளைப் பரீட்சார்த்திகளால் பெற்றுக்கொள்ள இயலவில்லை.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்களை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

**(கட்டாய வினா)**

**(A)** **(a)** பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளாலும் பயங்கரவாதத் தாக்குதல் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி விபரமான விடையை அளிப்பதற்கு இயலுமாக இருந்ததுடன் அவர்கள் அதற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்டுமிருந்தனர்.

**(b)** பல பரீட்சார்த்திகள் நேரில் வரிகளின் நோக்கங்களுக்குப் பதிலாக வரிகளின் சேகரிப்பு பற்றி எழுதியிருந்தனர். அவர்கள் வரி அதிகரிப்பு பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது என எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் இந்த வினாவை விளங்கிக் கொண்டிருக்கவில்லை என்பதை இத்தகைய விடைகளிலிருந்து தெளிவாக உணரக் கூடியதாக இருக்கிறது.

**(B)** பல பரீட்சார்த்திகள் தேசிய கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பில் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்ட இவ்வினாவுக்கு முழுப்புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகளுக்கு கணித வழுக்கள் காரணமாக புள்ளிகளைப் பெற இயலவில்லை. பொருட்கள் மீதான வரிகள் மற்றும் மானியங்கள் போன்ற உருப்படிகளை முகாமிப்பதற்குரிய புரிதலை சில பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அவர்கள் மானியங்கள் மற்றம் வரிகளைக் கூட்டி நேரில் வரிகளுக்குப் பதிலாக பிழையாக மானியங்களைச் சீராக்கியிருந்தனர்.

**(C)** தேசிய கணக்குகளைத் தயாரிப்பதன் முக்கியத்துவம் பற்றி எழுதுகையில், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடைகளை வழங்கி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வரையறுக்கப்பட்ட அளவிலான பரீட்சார்த்திகள் வினாவுக்குச் சம்பந்தமற்ற விதத்தில் விடைகளை எழுதியிருந்தனர். அவர்கள் நாட்டிற்குள் எந்தெந்த வழிகளில் பணம் முதலீடு செய்யப்பட வேண்டும், எந்தெந்தப் பகுதிகளில் முதலீடு செய்யப்பட வேண்டும், அத்தகைய முதலீட்டிற்குத் தேவையான ஏற்பாடு போன்றவற்றை எழுதியிருந்தனர்.

\- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. விசேடமாகச் சுய கற்றல் புத்தகங்கள், புத்தகங்கள், கையேடுகள், ஆவணங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.

5. வரைபடங்களைச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.

6. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

7. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

9. பொருளியல் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர்புடையவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

10. நேர முகாமைத்துவம் முக்கியமானது.

11. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -